**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

# பதவி வெற்றிடங்கள்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வெற்றிடம் உள்ள கீழுள்ள பதவிகளுக்காக தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

### 01. பதவி: பணிப்பாளர் (சட்டம்) "சிரேஷ்ட முகாமைத்துவம்" (HM 1-1)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 01
ii. சம்பள அளவு: HM I-I (2025) - 140,640 - 15x4,100 - 202,140/-
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 35 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:-**

**(a) கல்வித் தகைமை:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட சட்டத் துறை பட்டம் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத் துறை இறுதிப் பரீட்சையில் (Attorney at Law) சித்தி பெற்றிருப்பதுடன் சட்டத் துறையின் பட்டப் பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

**(b) அனுபவம்:-**

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது சட்டரீதியான சபை ஒன்றில் சட்டத்தரணி ஒருவராக முகாமைத்துவ தரத்தின் சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

சட்டத் துறையின் திட்டமிடல்/ கொள்கை ஆய்வு தொடர்பில் அனுபவம் ஒன்றை பெற்றிருப்பது தகைமை ஒன்றாக கருதப்படும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:-**

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளராக (சட்டம்) "முகாமைத்துவ" சேவை மட்டம் I ஆம் தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் குறித்த துறையில் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

### 02. பதவி: உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) HM I-I (தரம் II)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 01
ii. சம்பள அளவு: MM I-I (2025) - 91,690 - 10x2,480 -15x3,450 - 168,240
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
iv. கல்வித் தகைமை:

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முகாமைத்துவம், விஞ்ஞானம், சட்டம், நிர்வாகம் தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் ஒன்று.

**மற்றும்**

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச அல்லது அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ துறையில் மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:-**

கனிஷ்ட முகாமைத்துவ சேவை மட்டத்தில் I ஆம் தரத்தில் நிர்வாக அதிகாரி பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

### 03. பதவி: உதவிப் பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் இழப்பீடு) HM I-I (தரம் II)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 01
ii. சம்பள அளவு: MM I-I (2025) - 91,690 - 10x2,480 -15x3,450 - 168,240
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
iv. கல்வித் தகைமை:

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தோட்ட நிர்வாகம் மற்றும் மதிப்பீடு தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் ஒன்று.

**மற்றும்**

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச அல்லது அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் மதிப்பீட்டாளர் ஒருவராக மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:-**

கனிஷ்ட முகாமைத்துவ சேவை மட்டத்தில் I ஆம் தரத்தில் மதிப்பீட்டு ஆய்வு பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

### 04. பதவி: உதவிப் பணிப்பாளர் (பிராந்தியம்) HM I-I (தரம் II)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 03
ii. சம்பள அளவு: MM I-I (2025) - 91,690 - 10x2,480 -15x3,450 - 168,240
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
iv. கல்வித் தகைமை:

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கலைமாணி பட்டம், முகாமைத்துவம், விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், சட்டம், நிர்வாகம் தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் ஒன்று.

**மற்றும்**

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச அல்லது அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் காணித் துறையில் மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

### 05. பதவி: தகவல் தொழில்நுட்ப அதிகாரி JM I-I (தரம் II)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 01
ii. சம்பள அளவு: JM I-I (2025) - 72,650/- 10x1,360 -18x 2,040 -122,970/-
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
iv. கல்வித் தகைமை:

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு:-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அந்தத் தகைமையைப் பெற்ற பின்னர் அரச அல்லது அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் அனுபவம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு:-**

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவிச் சேவை மட்டம் I ஆம் தர அதிகாரியாக குறித்த துறையின் பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

### 06. பதவி: மதிப்பீட்டு அதிகாரி MA 3 (தரம் III)

i. வெற்றிடமாக உள்ள பதவி எண்ணிக்கை: 01
ii. சம்பள அளவு: MA 3 (2025) - 53,940/- 10x800- 11x 1,190 -10x1,320
5x1,350 - 94,980/-
(01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய 2027.01.01 ஆம் திகதி தொடக்கம் இந்த அடிப்படைச் சம்பளத்திற்கு உரித்தாகும்.)
iii. வயது வரம்பு: 22 வயதுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
iv. கல்வித் தகைமை:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து மதிப்பீடு தொடர்பில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் மதிப்பீடு தொடர்பில் சேவை அனுபவம் ஒன்றை பெற்றிருப்பது மேலதிகத் தகைமை ஒன்றாக கருதப்படும்.

07. **வேறு நன்மைகள்:-**
   i. இந்த நியமனம் நிரந்தரமானது.
   ii. குறிப்பிடப்பட்ட மேலுள்ள சம்பளம் தவிர அந்தந்த பதவிக்காக அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
   iii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிறுவனத்தின் 15% பங்களிப்பும், அதிகாரியிடம் இருந்து 10% பங்களிப்புடன் அதிகாரி சார்பில் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வைப்புச் செய்யப்படும்.
08. தற்போது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு மேல் குறிப்பிடப்பட்ட உச்ச வயது வரம்பு பொருந்தாது.
09. விண்ணப்பதாரர்களால் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் தம்மால் www.lrc.gov.lk என்ற காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்த 2026.11.06 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைப்பதற்கு வகைசெய்தல் வேண்டும்.
10. அனைத்து விண்ணப்பதாரர்களின் விபரங்கள் குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்டு நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும்.
11. தற்போது அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை நிறுவனங்களில் சேவை புரியும் அதிகாரிகளின் விண்ணப்பங்கள் தமது திணைக்களம்/ நிறுவன தலைவர்களின் பரிந்துரையுடன் அவர்களின் இந்தப் பதவிக்காக தேர்வு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு முடியும் என்பதை குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
12. விண்ணப்பங்களை அனுப்பும் போது விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**காணிச் சீர்திருத்த ஆணைக்குழு**
**இலக்கம் 475 கடுவளை வீதி,**
**பத்தரமுல்லை,**
**2026.10.07**